**BRAMPTON**

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## ப்ராம்ப்ட்டன் நகரம் 2021 ஆம் ஆண்டின் சிறப்பம்சங்களை வெளியிடுகிறது, முக்கிய சாதனைகளை காட்சிப்படுத்துகிறது

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 9, 2022) – இன்றைய தினம், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது நகரசபையின் ஆய்வுக்காலமாகிய 2018-2022 க்கான முன்னுரிமை கொண்ட விஷயங்களில், தான் செய்த முன்னேற்றங்கள் பற்றிய சமீபத்திய தகவல்களை வெளியிடுகிறது; இது கடந்த ஆண்டில் சாதித்த முக்கிய சாதனைகளை எடுத்தியம்புகிறது.

COVID-19 தொற்று பரவலைத் தொடர்ந்து அதன் ஊடாக நகரம் கடந்து செல்லுகையில், அது எதிர்கொண்ட சவால்கள் இருந்தபோதிலும், குடியிருப்பாளர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திறமை வாய்ந்த மற்றும் பயனுள்ள சேவைகளை வழங்கியது; மேலும் இந்த நகரசபையின் ஆயுட்கால முன்னுரிமை கொண்ட விஷயங்களை முன்னெடுப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது.

**கோவிட்-19 தொற்று பரவலின்போது சமுதாயத்திற்கான ஆதரவு**

சமூகத்தில் COVID-19 தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு மற்றும் ஆதாரவளங்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்யுமுகமாக, நகரத்தின் பணிப்படைகளும் மற்றும் நகரைமீண்டும் திறப்பது மற்றும் அதன் மீட்புக்கான பணிக்குழு ஆகியவை தங்கள் பணியைத் தொடர்ந்தன; தொற்று பரவல் தொடங்கியதில் இருந்து $120 மில்லியனுக்கும் அதிகமான கோவிட் தொடர்பான நிதியை வாதாடி பெற்றனர்.

இதில் பல சிறப்பு அம்சங்கள் உள்ளன, அவற்றில் அடங்கும் சில:

- சமூக ஆதரவு பணிப்படையானது, சமூக அமைப்புகளுக்கு 350 க்கும் மேற்பட்ட சானிட்டைசர் பெட்டிகளையும், பாக்டீரியா எதிர்ப்பு துடைப்பான்கள் கொண்ட 200 பெட்டிகளையும் விநியோகித்தது; மற்றும் பீல் பகுதி பசி போக்குவதற்கான நிவாரண நெட்வொர்க்கை மேம்படுத்துவதில் பீல் பிராந்தியத்தில் உள்ள முன்னணி உணவு விநியோகஸ்தர்களுடன் கூட்டு சேர்ந்தது.
- முதியோர்களுக்கான டிஜிட்டல் கஃபே மூலம் 51 சந்திப்புகளை ப்ராம்ப்ட்டன் ரிக்ரியேஷன் அமைப்புடன் இணைந்து மூத்தகுடிமக்களுக்கு ஆதரவளிக்கும் பணிக்குழு முனைப்பாக செய்தது;

மற்றும் பீல் பிராந்தியத்தின் சமூக செவிசாய்ப்பு அமைப்புக்கான மூத்தகுடிமக்கள் துணைக் குழு மற்றும் வெகுஜன தடுப்பூசிக் குழுவினருடன் இணைந்து ஒத்துழைப்பு கொடுத்தது.

- இளைஞர் ஆதரவுக்கான பணிப்படையானது, இலவச பரஸ்பர செயல் புரிகின்ற மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூக ஊடக செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுக்களுக்கு ஏற்பாடு செய்தது; அத்துடன் இளைஞர்களை சுறுசுறுப்பாகவும் பொழுதுபோக்கில் ஈடுபட்டவர்களாகவும் இருக்கவைக்க, உடற்பயிற்சி திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை ஊக்குவித்தது; மற்றும் 40 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொண்ட சேவை செய்யும் நிறுவனங்களின் நெட்வொர்க் மூலம் சேவைகளை எளிதாக்கியது மற்றும் மேம்படுத்தியது.
- பொருளாதார ஆதரவு பணிப்படையானது, மூன்று சிறு வணிக வட்டமேசை கூட்டங்களை நடத்தியது; இதில் சுமார் 60 சிறு வணிகங்கள் கலந்து கொண்டன; மற்றும் ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோர் மையம் மூலமாக 850 சிறு வணிகங்களுக்கு 78,800 ரேபிட் ஆன்டிஜென் சோதனைகளை வழங்கியது.
- மீண்டும் திறத்தல் மற்றும் மீட்சிக்கான பணிப்படையானது, வளர்ச்சியில் பங்கேற்பவர்கள் அடங்கிய இரண்டு கூட்டங்களை ஏற்பாடு செய்து, 55 க்கும் மேற்பட்ட சமூக குழுக்களில் ஈடுபட்டு நகர வசதிகள் மற்றும் திட்டங்களை பாதுகாப்பாக மீண்டும் திறப்பது பற்றி விவாதித்தது; மற்றும் துணை சட்டம் மற்றும் அமலாக்கத்துறை மற்றும் பீல் பிராந்தியத்தின் சுகாதார மருத்துவ அதிகாரி ஆகியோருடன் சேர்ந்து சமூக ஊடகங்களில் பல பொது ஈடுபாட்டு நிகழ்ச்சிகளை பணிப்படைத் தலைவர் நடத்தினார்.

**ப்ராம்ப்ட்டன் நகரம் வாய்ப்புக்களுக்கான நகரமாகும்**

வாழ்வதற்கேற்ற மற்றும் செழிப்புக்கான நகரமாக தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது:

- நகரசபை அங்கீகரித்த மலிவு விலை வீட்டு வசதி யுக்திக்காக $8.4 மில்லியன் ஒதுக்கப்பட்டது
- புதிய ஒருங்கிணைந்த டவுண்டவுன் திட்டத்தின் ஒரு பகுதியாக தெருக்களின் எழில் கூட்டும் பணிக்காக $16.6 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது
- வரவேற்பு தரும் தெருக்கள் எனும் ஆரம்பகட்ட திட்டத்திற்காக பீல் பிராந்தியத்திலிருந்து $250,000 பெறப்பட்டது, இது சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துவதன் மூலம் நகர சமூகங்களுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச தொழில்முனைவோருக்காக ப்ராம்ப்ட்டன் புதுமை படைக்கும் மாவட்டம் (Brampton's Innovation District) இல் பீஹைவ் ப்ராம்ப்ட்டன் (BHive Brampton) தொடங்கப்பட்டது, இதில் 14 ஸ்டார்ட் அப்கள் (புதிய தொழில் முனைவோர்) ஏற்றுக்கொள்ளப்பட்டனர்

**ப்ராம்ப்ட்டன் ஒரு பலகலவை நகரமாகும்**

- நகரமானது, ப்ராம்ப்ட்டனின் பன்முகத்தன்மையைக் கொண்டாடுகிறது மற்றும் நகரம் முழுவதிலுமாக பன்முகத்தன்மையை பதிய வைக்க ஒரு முழுமையான கட்டமைப்பை உருவாக்குகிறது:

- ப்ராம்ப்ட்டன்-ஐ முன்னேற்றுங்கள் நிதி (Advance Brampton Fund) யின் மூலம் 70 நிறுவனங்களுக்கு $675,238 நிதியுதவி விநியோகம் செய்யப்பட்டது
- பல்வேறு சமூகங்களுக்கான பிராம்ப்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பு நடத்திய தொழில் தகவல் அமர்வுகளில் 500+ பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர்
- மார்கியூ விழா மற்றும் நிகழ்வுகள் நிதி (Marquee Festival and Events Fund) மூலமாக 6 சமூக அமைப்பு நிகழ்வுகளுக்கு $290,775 வழங்கப்பட்டது
- ப்ராம்ப்ட்டன் கலை, கலாச்சாரம் மற்றும் படைக்கும் தொழில் முன்னேற்ற முகமை (ACCIDA) பலதரப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட குழுக்களுக்காக, ஒத்துழைப்பு கொடுக்கும் நிகழ்ச்சிகள், மற்றும் வாய்ப்புகளுக்கு முன்னுரிமை அளித்தது.

**ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரமாகும்**

நகரமானது நிலைத்து நிற்கவல்ல தன்மையைக் கட்டமைக்கிறது:

- மின்சக்தி மூலமாக முழுமையாக இயங்கும் தீயணைப்பு வண்டியை வாங்கிய ஒன்ட்டாரியோவின் முதல் நகராட்சி இதுவேயாகும்
- ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து படைக்கு எட்டு மின்சார பேருந்துகளை கொண்டு வந்தது
- பேட்ஸ்மேன் பார்க் மரக் கிடங்கை மீட்டெடுக்க CN மற்றும் ட்ரீ கனடாவில் இருந்து $25,000 மானியம் பெறப்பட்டது
- 8,000 மரக்கன்றுகளை நடுவதற்கு கனடா அரசாங்கத்திடம் இருந்து $1.2 மில்லியன் பெறப்பட்டது

**ப்ராம்ப்ட்டன் நகரம் ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதுமான நகரமாகும்**

நகரமானது சமுதாயப் பாதுகாப்பு, மன நல ஆதரவை மேம்படுத்துதல் மற்றும் செயல்பாடுள்ளதும் ஆரோக்கியமானதுமான வாழ்க்கைப் பாவனைகளை உற்சாகப்படுத்துதல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகிறது:

- ஜேய்ஸ் கேர் அறக்கட்டளை மற்றும் பீல் மாவட்ட பள்ளிகள் வாரியத்துடன் இணைந்து, ஜூடித் நைமன் ஃபீல்ட் ஆஃப் ட்ரீம்ஸ் எனும் பேஸ்பால் டயமண்ட் மைதானத்தை நிறைவு செய்தனர்.
- அனைத்து சாலைப் பயனர்களுக்கும் சாலைகளைப் பாதுகாப்பானதாக ஆக்க உதவும் வகையில், நகரத்தில் 50 தானியங்கி வேகக்கட்டுப்பாடு அமலாக்கக் கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன (ஒன்டாரியோவில் உள்ள மிகப்பெரிய ASE திட்டம்)
- சாலைவழிகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க, நகரம் முழுவதும் 180 சமூக பாதுகாப்பு மண்டலங்களை உருவாக்கியது

- ப்ராம்ப்ட்டன் விலங்குகள் சேவையானது,  கனடாவில் முதன்முதலாக விட்டுக்கு வீடு (ஹோம் டு ஹோம்™) எனும், செல்லப்பிராணிகளை அதனதன் வீட்டுக்கு அனுப்பக்கூடிய, பரஸ்பர செயல்புரியும் வகையிலான சேவையை வழங்கியது; இதன் பேரில் 103 செல்லப்பிராணிகள் தங்கள் வீடுகளுக்கு மீண்டும் வீடு திரும்பின.

**ப்ராம்ப்ட்டன் மிக நன்றாக நிர்வாகம் செய்யப்படும் நகரமாகும்**

ப்ராம்ப்ட்டன் நகரம் தினசரி இயக்க செயல்களை மேம்படுத்தி வருகிறது:

- S&P மூன்று A தர நிலை பெறுவதை, தொடர்ந்து 6 வது ஆண்டாகப் பெற்று, நகரத்தின் வலுவான பொருளாதாரம் மற்றும் நிதி மேலாண்மை நடைமுறைகளைப் பிரதிபலிக்கிறது.
- 2021 இல் கனடாவில் சிறந்த சமூகங்களுக்கான மெக்லீன் (Maclean) பட்டியலில் #13 ஆவது இடம் பிடித்துள்ளது
- ஃபோர்ப்ஸ் (Forbes) கனடாவின் சிறந்த வேலைவாய்ப்பு அளிப்பவர்களில் ஒருவராக 2021 ஆம் ஆண்டில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது
- குடியிருப்பு கட்டிடங்களுக்கான 10,463 அனுமதிகள் மற்றும் தொழில்துறை, வணிகம் மற்றும் நிறுவனங்களுக்கான 1,145 அனுமதிகள், என ஆக மொத்தம் $1.726 பில்லியன் மதிப்பிலான கட்டுமானங்கள்
- எப்போதுமில்லாத வகையில் கையிருப்பு நிதிக்காக $117 மில்லியன் பங்களிப்பு செய்து புதிய பீல் மெமோரியல் மருத்துவமனைக்கு $62.5மில்லியன் நிதியை ஒதுக்கியதன்  மூலம் சுகாதார விரிவாக்கத்திற்கான நகரத்தின் அர்ப்பணிப்பைக் காட்டும் அதே வேளையில், தொடர்ந்து நான்காவது முறையாக  வரி முடக்கம் வழங்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டிற்கான  சாதனைகள் மற்றும் சிறப்பம்சங்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு, வருகை தரவும்: www.brampton.ca/tocp.

**அறிஞர் கூற்றுக்கள்**

“நமது கட்டுப்பாட்டினை மீறிய சவால்கள் இருந்தபோதிலும், 2021 ஆம் ஆண்டு முழுவதும் எங்களின் முக்கிய முன்னுரிமை கொண்ட விஷயங்களில் நகரம் தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. முழுக்கவும் மின்சக்தியினால் இயங்ககூடிய தீயணைப்பு வாகனத்தை வாங்குவதன் மூலம் சுற்றுச்சூழலை நிலைக்க வைக்கும் தன்மையில் நம்மைத் தொடர்ந்து நிலைநிறுத்துவதில் இருந்து, நமது

நகரத்தின் தெருக்கலுக்கு எழில் கூட்டும் பணிகளுக்கான முதலீட்டிற்கு $16.6மில்லியன் ஒப்புதல் அளித்தது, மற்றும் எங்களின் நான்காவது தொடர்ச்சியான வரி முடக்கத்தை அடைவது வரை, கையிருப்பு நிதியில் ஒரு சாதனை பங்களிப்பைப் பேணுவதற்கும், சுகாதார விரிவாக்கத்தில் நகரத்தின் அர்ப்பணிப்பைக் காட்டுவதற்கும், நாங்கள் எங்கள் குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகங்களுக்கான பலன்களைத் தொடர்ந்து வழங்க பணியாற்றுகிறோம். 2022 ஆம் ஆண்டிலும் இதே பணிகளைத் தொடர நாங்கள் எதிர்நோக்குகிறோம்.

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

" 2021 ஆம் ஆண்டில், கோவிட்-19 தொற்று பரவலின் ஊடாக நாம் கடந்து வந்தபோது, நாம் பல சவால்களை எதிர்கொண்டோம், ஆனால் நமது குடியிருப்பாளர்கள், வணிகங்கள் மற்றும் சமூகக் குழுக்களைத் தொடர்ந்து ஆதரிப்பதற்கு நமது பணியாளர்கள் விரைவாக தங்களைப் பொருத்திக்கொண்டனர். இந்த கவுன்சிலின் ஆயுட்கால முன்னுரிமை கொண்ட விஷயங்களை முன்னெடுப்பதில் கூர்மையான கவனம் செலுத்தி, முக்கிய பணிகளுக்கான முயற்சிகளை தொடர்ந்து வழங்கி நமது நகரத்தை முன்னோக்கி நகர்த்தினோம். 2021 ஆம் ஆண்டில் நமது குழு அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து நான் பெருமைப்படுகிறேன், அதே நேரத்தில் நமது குடியிருப்பாளர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திறமையான மற்றும் பயனுள்ள சேவைகளை எப்போதுமே தொடர்ந்து வழங்குவோம்."

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter***, ***Facebook***, மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பல கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca